DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 74/2019

Prosecution witness – PW.1

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு. காளிஸ்வரன் | Caste: | |
| Father's Name | : சுப்பிரமணியன் | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

18.06.2025 – 12.35 PM

எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**சாட்சி கு.வி.மு.ச. பிரிவு 311ன் கீழ் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**:-

1. கொத்தடிமைகள் ஒழிப்புச் சட்டம் பற்றி ஏதேனும் விழிப்புணர்வு எனக்கு உண்டா என்றால் உள்ளது. எனக்கு எவ்வாறு விழிப்புணர்வு ஏற்பட்டது என்றால் பொதுவாக அரசுடைய Norms படி வருடந்தோறும் கொத்தடிமைகள் ஒழிப்பு குறித்து உறுதிமொழி எடுத்த வகையில் எனக்கு விழிப்புணர்வு உண்டானது. இது தவிர்த்து எனக்கு தனிப்பட்ட விதத்தில் பயிற்சி வழங்கப்படவில்லை என்றால் சரிதான்.

2. கொத்தடிமை என்றால் என்னவென்றால் தன்னிச்சையாக ஒரு நபரை செயல்படவிடாமல் வலுக்கட்டாயமாக வேலை வாங்குவது ஆகும். கொத்தடிமை சட்டத்தை நான் படித்துள்ளேனா என்றால் இல்லை. கொத்தடிமை சட்டத்தில் உள்ள வகைகள் பற்றி தெரிந்து கொள்ளாமல் ஒரு நபர் கொத்தடிமை என்று கூற இயலாது என்றால் சரியல்ல.

3. நான் வழக்கில் கண்ட நபர்கள் கொத்தடிமைகள் என்று எவ்வாறு கூறுகிறேன் என்றால் கார்த்திக் என்பவர் அருப்புக்கோட்டை தாலுகா அலுவலகத்தில் அவருக்கு ஏற்பட்ட துன்புறுத்தல்கள் குறித்து புகார் அளித்தார். அதன் அடிப்படையில் அருப்புக்கோட்டை RDO அவர்கள் பரமக்குடி RDO அவர்களுக்கு தகவல் அளித்து பரமக்குடி RDO எனக்கு தொலைபேசி மூலமாக

தகவல் அளித்தார். அரசாங்க அலுவலில் தொலைபேசி தகவல் வந்தால் அதை அனுசரித்து எழுத்துப்பூர்வமாகவும் தகவல் வாங்க வேண்டும் என்றால் அது கட்டாயமல்ல.

4. RDO விடமிருந்து எனக்கு தகவல் வந்ததாக சொல்லப்படுகிற நிலையில் உடனடியாக யாரெல்லாம் சம்பவ இடத்திற்கு சென்றோம் என்றால் நானும், மண்டலத்துணை வட்டாட்சியரும், வருவாய் ஆய்வாளரும், சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரும், கிராம உதவியாளரும் சென்றோம். Labour and Employment department லிருந்து கொத்தடிமையை கண்டறிவது, மறுவாழ்வு அளிப்பது பற்றிய அரசாணை MS.No.35, Dated.08.03.2019 எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி அரசாணையில் குறிப்பிட்டபடி யார் யாரை அழைத்துச் செல்ல வேண்டுமோ அவர்களை கண்டறிந்து அழைத்துச் செல்லவில்லை என்றால் அந்த அரசாணை பற்றிய விழிப்புணர்வு எனக்கு இல்லை.

5. நான் சேம்பருக்குள் சென்றவுடன் மொத்தம் 13 குடும்பங்கள் அங்கு இருந்தன. நான் அவர்களிடம் ஆவணங்கள் ஏதேனும் பெற்று விசாரணை நடத்தினேனா என்றால் நாங்கள் அவர்களை வாய்மொழியாகத்தான் விசாரித்தோம். அன்றைய தேதியில் ஆவணங்கள் எதுவும் சேம்பர் உரிமையாளர் தரவில்லை. எங்களையே செல்லவிடாமல் இருபுறமும் JCB இயந்திரத்தை வைத்து சேம்பர் உரிமையாளர் மூர்த்தியும், அவரது கூட்டாளிகளும் தடுத்தார்கள். அதனால் எங்களால் ஆவணங்களை பெற முடியவில்லை. இந்த விபரங்களை புகாரிலும், போலீசார் விசாரணையிலும் கூறியுள்ளேனா என்றால் புகாரில் சொல்லவில்லை. போலீசாரிடம் வாய்மொழியாக கூறினேன். நான் கூறியது போல போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் புதிய சங்கதிகளை கூறி மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. அன்றைய தினம் சேம்பருக்கு சென்றவுடன் 13 குடும்பத்தார்களிடமிருந்து ஆவணங்கள் எதுவும் கைப்பற்றினேனா என்றால் இல்லை. 13 குடும்பத்தார் அங்கு வேலை செய்தார்கள் என்பதற்கு எவ்வித

ஆவணங்களும் என்னால் கைப்பற்றப்படவில்லை என்றால் கைப்பற்ற முடியவில்லை. நான் அந்த 13 குடும்பத்தாரிடமும் சம்பளம் வழங்கப்படுகிற பட்டுவாடா சிட்டா, வேலைக்கு சேர்ந்த பத்திரம் ஆகியவைகளை கேட்டேன். ஆனால் சேம்பர் உரிமையாளர் மூர்த்தி என்பவர் அவைகளை மறைத்து வைத்துக் கொண்டார். அதனால் 13 குடும்பத்தார் என்னிடம் அதை வழங்கவில்லை.

7. நான் சேம்பரிலிருந்து பதிவேடுகளோ, வேலைக்கு சேர்ந்த Muster roll, வேலை செய்பவர்களின் வருகைப் பதிவேடுகளோ, சம்பளப் பட்டுவாடா, ஒப்பந்தப் பத்திரங்களோ, சம்பளம் விநியோகித்த பதிவேடுகளோ, மூர்த்தி என்பவர் சேம்பரின் உரிமையாளர் என்பதை காண்பிப்பதற்கு ஆவணங்களோ அன்றைய தேதியில் கைப்பற்றினேனா என்றால் அன்றைய தேதியில் கைப்பற்றவில்லை. நான் பின்னதாக மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திலிருந்து மூர்த்தி என்பவருக்கு சவுடு மண் அள்ளுவதற்கு அனுமதி வழங்கப்பட்ட ஆவணத்தை வாங்கி வைத்துள்ளேன். மேலும், Mines துறையிலிருந்து மூர்த்தி என்பவர் சவுடு மண் அள்ளுவதற்கு பணம் கட்டிய பதிவேட்டில் உள்ள ஆவணங்களையும் வாங்கியுள்ளேன்.

8. நான் மேற்படி ஆவணங்கள் குறித்து எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் இந்த வழக்கு விசாரணைக்கு வந்த பிறகு தான் தெரிந்து கொண்டேன். இந்த வழக்கு விசாரணைக்கு வந்த பிறகு அதை தெரிந்து கொள்ள என்ன சிறப்பு காரணம் என்றால் மூர்த்தி என்பவர் சேம்பரின் உரிமையாளர் என்பதை நிரூபிக்க வேண்டும் என்பதால் தான் நான் அதை தெரிந்து கொண்டேன். நான் பெற்றுக்கொண்ட ஆவணங்களை போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை.

9. அன்றைய தினம் போலீசாரை வரவழைத்து 13 குடும்பத்தாரை போலீசார் உதவியுடன் அருப்புக்கோட்டை RDO வசம் ஒப்படைத்தோம். வழக்கு பதிவு செய்வதற்கு முன்னதாகவே போலீசாரிடம் ஒப்படைத்தோம். 30.06.2022 ம் தேதியன்று ஒப்படைத்தோம். நான் அந்த 13 குடும்பத்தாருக்கு கொத்தடிமை

தொழிலாளர் மீட்பு சான்றிதழ் வழங்கினேனா என்றால் நான் வழங்கவில்லை. நான் 13 குடும்பத்தாரை அருப்புக்கோட்டை RDO வசம் ஒப்படைத்ததற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் ஆவணங்கள் எதுவும் இல்லை.

10. 13 குடும்பத்தாருக்கு பண உதவி வழங்கப்பட்டதா என்றால் அவர்கள் சேம்பரிலிருந்து வெளியே வந்தவுடன் ரூ.1000/-ம் நான் Contingency நிதியிலிருந்து கொடுத்தேன். மீதம் ரூ.19,000/-த்தை அருப்புக்கோட்டை RDO வழங்கினார். சான்றிதழும் அவர்தான் வழங்கினார். இந்த விபரத்தை போலீசார் விசாரித்தபோது கூறினேனா என்றால் இல்லை. அங்கு மீட்கப்பட்ட நபர்களுக்கு குடும்ப அட்டை உள்ளதா என்பதை விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

11. கொத்தடிமை தொழிலாளர் என்று ஒருவர் மீட்கப்படுகின்ற சமயத்தில் அவருக்கு நிதியுதவியாக ரூ.20,000/- கொடுக்க வேண்டும் என்பது தெரியும். வேறு சலுகைகள் என்ன என்பது பற்றி எனக்கு தெரியவில்லை. கோட்டாட்சியர் எனக்கு தகவல் அளித்தவுடன் சம்பவ இடத்திற்கு நானே செல்ல காரணம் என்னவென்றால் தாசில்தார் என்ற முறையில் சம்பவ இடத்திற்கு சென்றேன். எனக்கு வந்த தகவலே நீங்கள் சென்று விசாரணை நடத்துங்கள் என்று தான் வந்தது. இந்த தகவலை போலீசார் விசாரித்தபோது கூறவில்லை என்றால் சரிதான்.

12. நான் கூறியபடி சேம்பருக்கு செல்லவில்லை என்றாலும், அங்கு கொத்தடிமைகளாக யாரும் கண்டறியப்படவில்லை என்றாலும், சேம்பரின் உரிமையாளர் யார் என்பதை நான் தெரிந்து கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. அரசு தரப்பிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்./-திருமதி. G. தங்க கார்த்திகா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.